[புலவர் கா. கோவிந்தன்] [1975 ஏப்ரல் 2

ஆனுல் கொடுக்கப்பட்ட காரணமென்ன? சென்ற மார்ச் திங்களிலே நம்முடைய மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினுர்கள். அவர்களை எனக்கு நீண்ட நாட்களாகத் தெரியும். 1952-லே என்னுடைய தொகுதியிலே திரு. செங்கல்வராயன் அவர்கள் நாடாளுமன்றத்திற்கு போட்டியிட்டபோது, அவருடைய தேர்தல் பிரச்சாரம் நடத்துகின்றவர்களிலே நம் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒருவராவர். அந்த நாளிலிருந்து அவர்கள் எவ்வளவு விருவிருப்பான அரசியல்வாதி என்பதை உணர்ந்திருக்கிறேன். தான் நினைத்த கருத்துக்களை நினைத்த நேரத்திலே சொல்லி விடவேண்டுமென்ற துடிப்பான உணர்வுடையவர்கள். அதைப் பாராட்ட வேண்டும். ஆனுல் சொல்லுவதற்கு ஏற்ற முறையைக் கற்று கொண்டு சொல்ல வேண்டும். அவர்கள் தூக்கத்திலே இருந்து எழுந்தால்கூட அவர்கள் வாயிலிருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்றுதான் வரும். இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னுல் தான், பேசுகின்றவர்கள் உட்காரு வார்கள். நாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்லி விடலாம் என்ற கருத்தில் சொல்லுவார்கள். அதை இங்கே இப்பொழுது பார்த்ததில்லாமல், 1962-லிருந்து 1967-வரையிலும் இந்தச் சட்ட மன்றத்திலே நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது, பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி அப்போதைய பேரவைத் தலைவர் என்ன கூறி யிருக்கிருர்கள் என்ருல் உங்களுக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது என்ன வென்று தெரியவில்லை என்று சொல்லியிருக்கிருர். அதைக் குறையாகச் சொல்ல வில்லை. அந்தத் துடிப்பான உணர்வுகள்தான் காரணம்.

நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்கிறீர்களே அல்லாது எது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுவதில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னேன். அந்தக் கட்டத்திலே தான் தலைவர் பதவி விலக வேண்டுமென்ற தீர்மானம் வந்தது.

இப்பொழுது நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெளிவாகச் சொன்னுர்கள். இந்த வறட்சி நிவாரணம் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மத்திய அமைச்சர் திரு. சி. எஸ். அவர்களுக்கும் கருத்து வேறுபாடு உண்டாகி, அதைப் பற்றி நாங்கள் இங்கே உரிமைப் பிரச்னை கொடுத்தோம். அது அனுமதிக்கப்படவில்லை. அது அறையிலே தள்ளப் பட்டது. அதன் காரணமாக இங்கே இப்போது இந்தப் பதவி விலகல் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுர்கள். ஆனுல் பதவி விலகல் தீர்மானம் கொடுக்கப்படுகின்ற நேரத்தில் இந்தச் சிறு காரணங் களுக்கு கொடுத்து விடலாமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

1975 ஏப்ரல் 2] [புலவர் கா. கோவிந்தன்]

நம்முடைய பாராளுமன்றத்தில் பேரவைத் தலைவராக இருந்த திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

We have to remember that the office of the Speaker is an august one. He is one who should be shown all respect by every section of the House. In fact, he cannot discharge his onerous responsibilities effectively if he is denied such respect. It follows that motions or resolutions for the removal of the Speaker should not be brought forward in a light-hearted manner . . .

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பேரவைத் தலைவர் மீது ஒரு சிறு காரணத்திற்காக வெறுப்பு வந்தவுடனே, பதவி விலகல் தீர்மானம் கொடுத்து விடுவது என்பது அவ்வளவு நல்ல மரபாக இருக்காது. பாயின்ட் ஆப் ஆர்டர் காரணமாக அப்போது வந்தது. அப்போது நான் அதற்கான காரணங்களையெல்லாம் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் அதற்குள் அந்தத் தீர்மானம் கொடுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் ஏதோ காரணத்தைக் காட்டி, வெளியேறிய காரணத்தால் அதை அப்போது சொல்வதற்கு முடியவில்லை.

இங்கே பாயின்ட் ஆப் ஆர்டர் எப்படி எழுப்பப்படுகிறது என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம் உணருவார்கள். இன்று ஒரு நாள் எத்தனை உறுப்பினர்கள் எத்தனை விதமான பாயின்ட் ஆப் ஆர்டர்கள் எழுப்பினார்கள், அதை நம்முடைய பேரவைத் துணைத்தலைவரவர்கள் எந்த அளவுக்கு அனுமதித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு இந்த மன்றத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் நிலைமைகள் எந்தெந்த அளவில் கையாளப்பட்டன என்பதைச் சொல்கிறேன்.

" 5—8—1966 Motion expressing want of Confidence in the Ministry (Vol. XXXIX page 505.) என்ற பகுதியில்—

" THIRU K. A. MATHIALAGAN : On a point of order, Sir.

MR. SPEAKER : No point of order. Let the hon. Member resume his seat.

(Many hon. Members belonging to the opposition rose in their seats on points of order).

MR. SPEAKER : So many hon. Members getting up and shouting is not a point of order. Let them please resume their seats.